பொய்ம்மை புலால்கள் - பொய்சொல்வதிலும் புலால் தின்ப திலும், மறையுடைமை - நீக்கும் தன்மையும், இவையுடையான் - இக்குணங்களையுடையவன், பல் உயிர்க்கும் - பல ஆத்துமாக் களுக்கும், தாய் அன்னன் - தாய்க்குச்சமானமானவன், என் னத்தகும் - என்று சொல்லத்தக்கவன்.

நிறைமுதலிய சற்குணமுள்ளவன் எல்லாருக்கும் தாய்க்குச் சமானமானவன், ஏனென்றால், தாயைப்போல் ஆதரிப்பதற்கு ஏதுவானகுணங்களை யுடைமையாலே என்பது கருத்து.

நிறை — தராசினால் நிறுக்கப்படுவது, இருக்கவேண்டிய நிலை; நிறு - பகுதி, ஐ - விகுதி. கொடு ஐ, பொறு ஐ, மறு ஐ (மறுத்தல்) இவையெல்லாம் தொழிற்பெயராய் குணங்களை காட்டுவன. "முற்றுமற்றொரோவழி" என்பதனால் உகரங்கெட டது. கொடையே — இந்த ஏகாரம் எண்ணிடைச்சொல் பொய்மைபுலால் — உம்மைத்தொகை. அன்னன் — அன் என னும் ஒப்பிடைச்சொல்லின்மேல் வந்தபெயர்; குறிப்பு முற்று மாம். தோளி—இ - உடைமைப்பொருளைக்காட்டும் பெண்பா விகுதி.

இன்சொ லளாவ லிடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல் - மென்சொல்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து.

(இ - ள்.) மென்சொல் - மெதுவானசொல்லையும், முருந் தேய்க்கும் - மயிலினிறகடியை ஒத்த, முளைபோல் - முளைபொ ருந்த, எயிற்றினாய் - பற்களையுடையவளே ! யாவர்க்கும் - எல் லாருக்கும், இன்சொல் - மதுரமான பேச்சுப்பேசுவதும், அளா வல் - க்ஷேமவிசாரணைசெய்வதும், இடம் - இருக்க இடமும், இனிது - இனிமையான பொருளும், ஊண் - சாப்பாடும், வ சொல்களைந்து - கடினமானசொற்களை நீக்கி, வகுப்பானே கொடுப்பானாயின், விண்ணோர - தேவதைகள், நாளும் - போதும், விரைந்து - துரிதப்பட்டு, விருந்து ஏற்பர் - (அவனை விருந்தினனாகக் கொள்வார்கள்.

(இ - ள்.) மாண்டு அமைந்தார் - பெருமைப்பட்டுள்ள
ஆய்ந்தமதி - ஆராய்ந்து எடுத்தயுத்தியும், வனப்பே - பெருவ
யானதோற்றமும், வன்கண்மை - வீரதீரமும், ஆண்டு அ
ந்த - தாம் கையாண்டு பொருந்திய, கல்வியே - படிப்பு
சொல் ஆற்றல் - பேசுவதில் சாமர்த்தியமும், பூண்டு அ
ந்த - தாம் அனுபவித்துப்பொருந்திய, காலம் அறிதல் - (அ
ரிடஞ்செல்வது முதலியவற்றின்) காலத்தை அறியுந்திறமு
கருதுங்கால் - யோசிக்குமிடத்து, தூதுவர்க்கு - தூது செ
வருக்கு, ஞாலம் அறிந்தபுகழ் - பூமியெல்லாம் தெரிந்தி
கிற கீர்த்தியாகும்.

பெரியோர் எவ்வகையுத்தியை மேன்மைப்படுத்தினார்களே
அவ்வகைப்புத்தியும் பார்க்கும்பொழுதே பெருமை தோ
றும்படியான ரூபமும் பிறர் அஞ்சும்படியான தீரநிலையும் (
ர்ந்தகல்வியும் பேசுந்திறமும், அவரவரிடம் செல்வதற்கு
பேசுவதற்கும் இன்னும் அந்தந்தத்தொழிலுக்குமேற்ற க
மறியும் சக்தியும் தூதுவர்க்கு இருக்கின் மிக்க புகழ் என்ப
கருத்து.

மதிவனப்பே முதலியவை விகாரத்தால் தொகைபெறு
யின. சொல்லாற்றல்—சொல்லில் ஆற்றல் எனவிரிக்க. (உ

அஃகுநீ செய்ய லெனவறிந்தா ராய்ந்து
வெஃகல் வெகுடலே தீக்காட்சி - யெஃகுமன்
கள்ளாத்த வல்ல கருதி னிவைமூன்றும்
உள்ளத்த வாக வுணர்.

(இ - ள்.) வெஃகல் - பிறர்பொருளின்மேல் ஆசைப்படுத
அஃகு - குறை, வெகுடலே - வீணுக்கோபிப்பதை, நீ - நீக்
தீக்காட்சி - தீமையான பார்வையை, செய்யல் - செய்யாதே
என - என்று, அறிந்து - (பெரியோர்சொல்லத்) தெரிந்துகொ
ண்டு, ஆராய்ந்து - யோசித்து, எஃகு - அவற்றைமேற் கொ
ள்ளு; கருதின் - ஆராய்ந்து பார்த்தால், இவை மூன்று
அஃகன்முதலிய மூன்றுதருமங்களும், கள்ளாத்த அல்ல -
டமுள்ளவை அல்ல, உள்ளத்த ஆக - மனதில் வைக்கத்த
வையாக, உணர் - தெரிந்துகொள்.

இன்னாத—பலவின்பாற்பெயர், இன் - இனிமையின் அடி, பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, தகரம் - எழுத்துப்பேறு, அகரம்—பலவின்பால்விகுதி. இல் ஊண்—பண்புத்தொகை. வெல்வான்—முற்றெச்சம். ஓட்டல் - அப்புறம்போகச்செய்தல், நீக்குதல் என்றபடி. (௭௦)

களியான்கள் ளுண்ணான் களிப்பானைக் காணா
னொளியான் விருந்திற் குலையான் - எளியாரை
எள்ளானீத் துண்பானே லேதமின் மன்னனாய்க்
கொள்வான் குடிவாழ்க்கை கூர்ந்து.

(இ-ள்.) களியான் - செருக்கடையாமல், கள் உண்ணான் - கள்ளைக் குடியாமல், களிப்பானைக் காணான் - கள்ளுண்டு களிப்பவனைப் பாராமல், விருந்திற்கு - விருந்தினருக்கு, ஒளியான் - உள்ளதை ஒளியாமல், உலையான் - (தன் ஆசாரத்தில்) தளராமல், எளியாரை எள்ளான் - வறுமை முதலியவை இல்லாதவரை இகழாமல், ஈத்து உண்பானேல் - தரித்திரருக்குக் கொடுத்து உண்பானாயின், ஏதம் இல் மன்னன் ஆய் - குற்றமில்லாத ராஜபதத்தை அடைந்து, கூர்ந்து - மிகவும், குடிவாழ்க்கை - குடிவாழ்க்கையை, கொள்வான் - கைக்கொள்வான்.

செருக்கு முதலிய துர்க்குணங்களை விட்டு அவ்விதமாகச் செய்பவன் அரசனாய்க் குடிவாழ்க்கை மிகுந்தவனாவா னென்பது கருத்து. (௭௧)

பெரியார்சொற் பேணிப் பிறழாது நின்று
பரியா னடியார்ப் பரியான் - கரியார்சொல்
தேற்றா னிளையயான் றெளிந்தடிசி லீத்துண்பான்
மாற்றாமை மன்னனா மற்று.

(இ-ள்.) பெரியார் சொல் பேணி - பெரியவர்களுடைய சொல்லை விரும்பிக்கேட்டு, பிறழாது நின்று - அதில் மாறாமல் நின்று, அடியார் - தம்மடிக்கீழ் வாழ்வோரை, பரியான் - அன்பில்லானாகி, பரியான் - நீக்காமல், கரியார் சொல் - அயோக்கியருடைய பேச்சை, தேற்றான் - நம்பாமல், தெளிந்து இளைய

